# திருப்பத்தூர் நகராட்சி

2023–ஆம் ஆண்டு ஜூலை மாதம் 24.07.2023–ம் நாள் திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு திருப்பத்தூர் நகராட்சி அலுவலக நகரமன்ற கூடத்தில் நகரமன்றத் தலைவர் அவர்களால் நடத்தப்பட உள்ள சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.

## பொருள்கள்

**316).** இந்நகராட்சியில் தூய்மைப் பணியாளராக பணிப்புரிந்து வந்த திருமதி.N.வள்ளி, க/பெ.நாகராஜன்(லேட்) என்பவர் 30.06.2023–ல் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற்றுள்ளதால் அவரது மாத ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை ரூ.2,960/– அதற்குண்டான வட்டி தொகை ரூ.8762/– மற்றும் நிர்வாக பங்கு தொகை ரூ.10,000/–மும் சேர்த்து மொத்தம் ரூ.21,722/–ஐ வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுதிக்கலாம்.

(ந.க.எண். 0595/2023/பி3)

**தீர்மானம் எண்.316, நாள்.24.07.2023**
**அனுமதிக்கப்பட்டது.**

**317).** இந்நகராட்சியில் தூய்மைப் பணியாளராக பணிப்புரிந்து வந்த திருமதி.நாகம்மாள், த/பெ.பென்சிலிகாடு என்பவர் 30.06.2023–ல் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற்றுள்ளதால் அவரது மாத ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை ரூ.2,960/– அதற்குண்டான வட்டி தொகை ரூ.15642/– மற்றும் நிர்வாக பங்கு தொகை ரூ.10,000/–மும் சேர்த்து மொத்தம் ரூ.28,602/–ஐ வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுதிக்கலாம்.

(ந.க.எண். 0596/2023/பி3)

**தீர்மானம் எண்.317, நாள்.24.07.2023**
**அனுமதிக்கப்பட்டது.**

**318).** இந்நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் ஓட்டுநராக பணிப்புரிந்து வந்த திரு.ஆறுமுகம், த/பெ.விஸ்வநாதன் கடந்த 03.12.2022–ல் மரணம் அடைந்து விட்டதால் அவரது மாத ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை ரூ.2,960/– அதற்குண்டான வட்டி தொகை ரூ.3801/– சேர்த்து மொத்தம் ரூ.6,761/–ஐ வழங்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுதிக்கலாம்.
(ந.க.எண். 0470/2023/பி3)

**தீர்மானம் எண்.318, நாள்.24.07.2023**
**அனுமதிக்கப்பட்டது.**

**319).** இந்நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் தூய்மை பணியாளராக பணிப்புரிந்து வந்த திரு.வி.பிரபு, த/பெ.வேணுகோபால் கடந்த 16.11.2020–ல் மரணம் அடைந்து விட்டதால் அவரது மாத ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை ரூ.2,960/– அதற்குண்டான வட்டி தொகை ரூ.2209/– சேர்த்து மொத்தம் ரூ.5,169/–ஐ வழங்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுதிக்கலாம்.
(ந.க.எண். 0699/2023/பி3)

**தீர்மானம் எண்.319, நாள்.24.07.2023**
**அனுமதிக்கப்பட்டது.**

**320).** திருப்பத்தூர் நகராட்சியில் அமைந்துள்ள தெருவிளக்குகள் தனியார் மூலம் பராமரிப்பு செய்யப்பட்டு வருகிறது. இதில் பிப்ரவரி 2023 முதல் ஏப்ரல் 2023 வரையிலான மூன்று மாத காலத்திற்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ.11.00 இலட்சத்திற்கும், மேற்காண் காலத்தில் பராமரிப்பு பணியினை மேற்கொள்ள நகரமன்ற தீர்மான எண்.57, நாள்.29.042022–ல் அனுமதித்துள்ள M/S KVM CONSTRUCTION, VENGALAPURAM நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட விலை விகிதத்தில் மேற்படி ஒப்பந்ததாரர் பணி மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கொண்ட பணிக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.320, நாள்.24.07.2023**
**அனுமதிக்கப்பட்டது.**

321). திருப்பத்தூர் நகராட்சி தலைமை நீரேற்று நிலையங்களான தென்பெண்ணை அம்பலூல் ஆகியவற்றின் மின்மோட்டார்களை இயக்கி நீரேற்றம் செய்யவும், சக்கரகுப்பம் BOOSTER, பாலம்மாள் காலனி (ம) திருவண்ணாமலைசாலை L & T மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள், பாலம்மாள் காலனி RO PLANT இயக்குவதற்கு போதுமான குடிநீர் பணியாளர்கள் இல்லாததாலும், குடிநீர் விநியோகம் தடைபடாமல் இருக்கவும் தனியார் மூலம் 15 ஒப்பந்தப்பணியாளர்கள் அமர்த்தி இயக்குவதற்கு மே 2023 முதல் ஜூலை 2023 வரையிலான மூன்று மாத காலத்திற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.5,75,000/–க்கும் மேலும் இதே பணிக்கு 20.04.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகளில் கோரி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் அளித்துள்ள KVM CONSTRUCTION, வெங்களாபுரம், நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை நகரமன்ற தீர்மான எண்.56, நாள்.29.04.2022–ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதே ஒப்பந்த்தாரரிடம் இதே ஒப்பந்த நிலைவிகிதத்தில் மேற்காண் மூன்று மாத காலத்திற்கு பணியாளர்களை அமர்த்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுதிக்கலாம்.
2. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 309/2022/இ1)

**தீர்மானம் எண்.321, நாள்.24.07.2023**
**அனுமதிக்கப்பட்டது.**

322). இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோயம்புத்தூர்–11, அவர்களின் கடிதம் ந.க.எண்.399/2023/அ2, நாள்.06.07.2023ஆம் தேதிய கடிதத்தில் கோரியுள்ளதற்கிணங்க, அரசாணை எண்.36, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ME–1) துறை நாள்.19.04.2021–ன்படியும் இந்நகராட்சியின் 2023–2024–ஆம் ஆண்டிற்கான சந்தா தொகை ரூ.1,25,000/– மட்டும் இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கொயம்புத்தூர் அவர்களுக்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

அனுதிக்கலாம்.

(ந.க.எண்.439/2008/சி1)

**தீர்மானம் எண்.322, நாள்.24.07.2023**
**அனுமதிக்கப்பட்டது.**

**323)** திருப்பத்தூர் நகராட்சிக்குச் சொந்தமான வாரச்சந்தை வளாகத்தில் (தற்போது தினசரி காய்கறி மார்க்கெட்) அமைந்துள்ள கட்டண கழிப்பிடத்தில் முன்னர் ஏற்பட்ட பழுதுகளைத் தற்போது பராமரிப்பு பணிகள் செய்து முடிக்கப்பட்டு பயன்படுத்தும் நிலையில் உள்ளது. எனவே மேற்படி கட்டண கழிப்பிட குத்தகை உரிமையை ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2024 வரை மட்டுமே அனுபவித்துக்கொள்ளும் குத்தகை உரிமைக்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| குத்தகை இனத்தின் விவரம் | 01.04.2023–க்குப் பின்னர் பெறப்பட்ட சொத்து மதிப்பு சான்றிதழ் ரூ. | அசல் சொத்து மதிப்பு சான்றுடன் செலுத்த வேண்டிய பொறுப்புத் தொகை ரூ. | சொத்து மதிப்பு சான்று பெறாதவர்கள் செலுத்த வேண்டிய பொறுப்புத் தொகை ரூ. |
|---|---|---|---|
| வாரச்சந்தை வளாகத்தில் உள்ள கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் குத்தகை உரிமை | 1,00,000/– | 25,000/– | 50,000/– |

<u>அலுவலக குறிப்பு</u>:–

2024–2025 ம் ஆண்டு முதல் மூன்றாண்டுகளுக்கு அனைத்து எட்டு குத்தகை இனங்களுக்கும் பொது ஏலம் விடவேண்டியுள்ளதால் இந்த இனத்திற்கு குறுகிய காலத்திற்கு மட்டும் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1253/2020/அ4)

**தீர்மானம் எண்.323, நாள்.24.07.2023**

**அனுமதிக்கப்பட்டது.**

**324)** தமிழ்நாடு அரசு செய்தி வெளியீட்டு எண்.731 நாள்.18.04.2023ன்படி அரசு கூடுதல் தலைமை செயலாளர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை – 09 அவர்களின் காணொலி ஆய்வுக்கூட்டம் நாள்.19.04.2023ல் தெரிவிக்கப்பட்டதன்படி, தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1988–க்கு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு 13.04.2023 முதல் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் விதி 2023, நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. (தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1988 பிரிவு 84 (1)–இல், 2023–24 ஆம் ஆண்டிற்கு சொத்து உரிமையாளர்கள் முதலாம் அரையாண்டிற்கு சொத்து வரி 30.042023–க்குள் செலுத்துவொருக்கு 5% ஊக்கத்தொகை (தள்ளுபடி) பெற தகுதியுடையவர்கள் ஆகிறார்.

எனவே, திருப்பத்தூர் நகராட்சி வார்டு எண்.1 முதல் 36 வரையுள்ள பகுதிகளில் குடியிருப்பு மற்றும் வணிகப் பயன்பாடு கட்டிடங்கள் சொத்து வரி முதலாம் அரையாண்டிற்கு 30.04.2023–க்குள் செலுத்துவோருக்கு 5% தள்ளுபடி செய்யப்பட்டுள்ள விவரத்தை ஆட்டோ ஒளிபெருக்கி மூலம், ப்ளாக்ஸ் பேனர், அறிவிப்பு நோட்டீஸ் (20,000 எண்ணிக்கை) அச்சு

அடித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த உண்டாகும் தோராய செலவீனம் ரூ.1,50,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1. மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று பேனர் மற்றும் ஆட்டோ விளம்பரங்கள் விலைப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
3. விழிப்புணர்வு அறிவுப்பு நோட்டீஸ் (20,000 எண்ணிக்கை) WEPCO, வேலூர் அவர்கள் மூலம் அச்சடித்து வாங்கிக் கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.304/2022/அ1)

**தீர்மானம் எண்.324, நாள்.24.07.2023**

**அனுமதிக்கப்பட்டது.**

**325)** சொத்துவரி பொது சீராய்வு - 01.04.2022 முதல் சொத்துவரி பொது சீராய்வு செய்யப்பட்டதை வரி விதிப்புதாரர்களுக்கு சிறப்பு அறிவிப்பு நோட்டீஸ் வழங்க வேண்டியதால் சிறப்பு அறிவிப்பு நோட்டீஸ் வார்டு வாரியாக லேசர் பிரிண்ட் (Laser printing) எடுக்க ஒரு பேப்பரில் விலை பிரிண்ட் எடுக்க எவ்வளவு என குறிப்பிட்டு 30.08.2022 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ் காணும் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.

| Sl.No | Name and Addres | Description | Rate Rs. Per Page Rs. |
|---|---|---|---|
| 1 | JAYAM ASSOCIATES,<br>No.66 Bazaar Main Road,<br>Velayuthampalayam, Karur. | Special Notice & Demand Notice – A4 Size Single side Printing | 3.50 |
| 2 | UNIQUE MICRO Computers (KARUR).<br>51/3 Karur Main Road.<br>Velayuthampalayam, Karur. | Property Report and Property Demand Notice | 3.75 |
| 3 | UNIQUE ASSOCIATERS.<br>2/125. (S.No.308-1A) Rasampalayam,<br>Keelsathampur Village, Namakkal. | Special Notice & Demand Notice Printing Per Page | 4.00 |

மேற்காணும் மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் உள்ள JAYAM ASSOCIATES, அவர்கள் Special Notice & Demand Notice – A4 Size Single side Printing எடுக்க ரூ.3,50காசு என குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

அவசர அவசியம் கருதி நகர மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.304/2022/அ1)

**தீர்மானம் எண்.325, நாள்.24.07.2023**

**அனுமதிக்கப்பட்டது.**

326) திருப்பத்தூர் நகராட்சி 2022–2023–ம் நிதியாண்டில் சொத்துவரி தொழில்வரி, குடிநீர் கட்டணம், கடை வாடகை ஆகியவைகளை பொதுமக்கள் நிலுவையின்றி செலுத்த கோரி நகர எல்லைக்குள் ஆட்டோ மூலம் விளம்பரம் செய்யவும் அதற்கான தோராய செலவினம் ரூ.1,50,000/– பொது நிதியில் இருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.420/2021/அ1)

**தீர்மானம் எண்.326, நாள்.24.07.2023**

**அனுமதிக்கப்பட்டது.**

**<u>327) நகரமன்றத் தலைவரால் கொண்டு வரும் சிறப்பு தீர்மானங்கள்:</u>**

| வ.எண். | பணியின் விவரம் |
|---|---|
| 1 | வார்டு எண்.2–ல் சுடுகாடு பராமரிப்பு பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.10.00 இலட்சம். |
| 2 | வார்டு எண்.3–ல் சிவராஜ்பேட்டை மற்றும் போஸ்கோ நகரில் உள்ள சமுதாய கூடம் பராமரிப்பு பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.3.00 இலட்சம். |
| 3 | வார்டு எண்.4–ல் பகிர்மான குழாய் பதித்தல் பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.0.50 இலட்சம். |
| 4 | வார்டு எண்.11–ல் புதூர் மாரியம்மன் கோவில் தெரு பகுதியில் மினி பவர் பம்ப் பராமரிப்பு பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.1.50 இலட்சம். |
| 5 | வார்டு எண்.22–ல் சிறுபாலம் கட்டும் பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.1.50 இலட்சம் |
| 6 | வார்டு எண்.21–ல் மினி பவர் பம்ப் பராமரிப்பு பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.1.50 இலட்சம். |
| 7 | வார்டு எண்.24–ல் அப்பாய் தெருவில் உள்ள மினி பவர் பம்ப் பராமரிப்பு பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.1.50 இலட்சம். |
| 8 | வார்டு எண்.26–ல் கௌதம்பேட்டை 1வது தெருவில் மழைநீர் கால்வாய் கட்டுதல் பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.1.00 இலட்சம். |
| 9 | வார்டு எண்.35–ல் அண்ணாநகர் மற்றும் ஆறுமுகனார் தெருவில் மழைநீர் கால்வாய் கட்டுதல் பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.3.00 இலட்சம். |

**தீர்மானம் எண்.327, நாள்.24.07.2023**

**அனுமதிக்கப்பட்டது.**

// உண்மைநகல் //

மேலாளர்,

திருப்பத்தூர் நகராட்சி.